# ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளும் காஞ்சி பரமாச்சார்ய ஸ்வாமிகளும்

ஆசிரியர்
R. ஜவந்திநாதன்





ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர
காஞ்சி சங்கர, காம கோடி சங்கர
த்வமேவ சரணம் பாஹிமாம் ஜகத்குரு

காவேரி தீரவாஸாய ராம பக்த அக்ரேசராய
வால்மிகி அம்ச பூதாய தியாகராஜாய நமோஸ்துதே

ஓம்

# சமர்ப்பணம்

முந்தித் தவம் கிடந்து, முந்நூறு நாள் சுமந்து, தொந்தி சரிய சுமந்து பெற்று, வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் வைத்தென்னை காப்பாற்றி சீராட்டி பாலூட்டி வளர்த்த என் அன்னை வடுவூர் மூர்த்தியம்பாள்புரம் ஸ்ரீமதி ராஜாம்மாள் அவர்களுக்கும்,

எனக்கு எழுத்தறிவு ஊட்டி பண்பு நெறி காட்டி நேர்மையுடன் எளிமையாய் வாழக்கற்றுக் கொடுத்த என் தந்தையார். தஞ்சாவூர் J. ரங்கசாமி அய்யர் அவர்களுக்கும் இதை என் காணிக்கையாக, நன்றிக்கடனாக சமர்ப்பிக்கிறேன்.

ஓம்
நாராயண
குருப்யோ நம!

# முன்னுரை

பக்த கோடிகளுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கங்கள். அடியேன் குருக்கிருபையாலும், பகவான் கருணையாலும், ஸ்ரீத்யாகராஜஸ்வாமிகள் திவ்ய சரித்ரம், மகாப் பெரியவாளின் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றைப் பலமுறை சங்கீத உபன்யாசமாகச் செய்து வந்திருக்கிறேன். அடியேன் அனுபவத்தில் இரு மகான்களிடம் பல ஒற்றுமைகள் இருந்ததைக் கண்டேன். அவை சுவையாக இருப்பதால், எல்லாருடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் இந்த சிறிய புத்தகம் உருவெடுத்தது.

எனக்கு இந்த இரண்டு மகான்களைப் பற்றி எழுத ஒரு யோக்யதையும் இல்லை. அவர்கள் ஸ்மரணையால் எழுந்த ஆர்வம் இதைச் செய்யத் தூண்டியது. பிழையிருப்பின் மன்னிக்க.

அவன் அருளால் அவன், தாள் வுணங்கி. என்பதற்கினங்க, இந்த மகா புருஷர்கள்தான் என் உள்ளே தோன்றி எழுத வைத்தார்கள் என்று அவர்களுடைய பாதார விந்தத்திலே இச்சிறு நூலைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

R. ஜவந்திநாதன்
ஆசிரியர்.

88/2, இந்திரா காலனி
அசோக் நகர்
சென்னை - 600 083.
Ph. : 4894536

# ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளும் காஞ்சி பரமாச்சார்ய ஸ்வாமிகளும்

(சில அதிசயமான ஒற்றுமைகள்)

உலகத்தில் பல மகான்கள் பல கால கட்டங்களில் அவதரித்து ஜனங்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆண்டவன் கருணையால் வழி தவறி தடுமாறித் தத்தளிக்கும் ஜீவாத்மாக்களை கரையேற்ற அவர்கள் உபதேசம் செய்து வந்தது மட்டுமல்லாமல் உதாரண புருஷர்களாகவும் விளங்கினார்கள். பகவானை அடைய பலவேறு மார்க்கங்கள் இருந்தாலும், ஞானம், பக்தி இரண்டும் பிரதானமாக அமைந்தன. உண்மையில் இரண்டும் வெவ்வேறு அல்ல. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். இவர்கள் வழியில் தோன்றி நன்றாய் பழுத்து சிறந்து விளங்கி எல்லா மக்கள் மனதையும் கவர்ந்து அவர்களை தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்த பெருமை இந்த இரு மகான்களைச் சாரும். எளிய வாழ்க்கை வாழ்ந்து, எளிமையாக பழகி எல்லாருக்கும் புரியும்படியாக எளிமையான பாஷையில் உபதேசம் செய்த மகாபுருஷர்கள். இவர்கள் வாழ்க்கை தமிழ்நாடு செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். இவர்களை நினைத்தால் போதும், அலைபாயும் மனம் அடங்கிவிடும். இவர்களை நினைத்தால் சகல பாவங்களும் போகும், வேதகாலத்தில் மகான்கள் எப்படி இருந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டவே இவர்கள் அவதாரம் என்று சொல்லலாம். ஒருவர் வால்மீகியின் அவதாரம். மற்றோருவர் ஆதிசங்கரரின் அவதாரம். ஒருவர் பக்த சிகாமணி மற்றோருவர் ஞானப் பழம். "செப்பு மொழி பதினெட்டு ஆனாலும் சிந்தனை ஒன்றே' என்றார் பாரதியார். சிந்தனைக்கு மொழி இல்லை.



## நிரபேக்ஷம், நிர்வைரம், முனிம், சாந்தம், சமதர்சனம்.

சாதுக்களுக்கு மேற்படி ஐந்து குணங்களும் அவசியம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் வாழ்க்கையில் இவை ஐந்தும் பிரகாசித்தன.

### நிரபேக்ஷம்

(ஆசையில்லாமை) சரபோஜி அரசர் நிறைய திரவியங்கள், ஆபரணங்கள் எல்லாம் அனுப்பிய போது. "நிதிசால சுகமா" என்று பாடி அவற்றை நிராகரித்தார்.

### நிர் வைரம்

(யாரிடமும் த்வேஷம் வைத்துக் கொள்ளாமை) தன்னை அடித்த அண்ணாவுக்கு மறுநாள் தேள் கொட்டியபோது, பதறிப்போய் மந்திரவாதியை ஏற்பாடு செய்து, விஷத்தை இறக்கச் செய்தார். தன்னை விரோதிப்பவரிடத்திலும் அன்பு செலுத்துதல் அவர் பண்பு. அதுவே உண்மையான ராமபக்தரின் குணம்.

### முனிம்

(கோபத்தை வெல்லுதல்)

தான் தினம் உறவு கொண்டு பூஜித்து வரும் ராம சீதா விக்ரகங்களை அண்ணா ஆற்றில் எறிந்து விட, கோபிக்காமல், "தன்னையே நொந்து கொண்டு தனக்கு பக்தி இல்லாததால் ராமர் தன்னை விட்டுப் போய்விட்டார் என்று தான் வருந்தினார்.

(பக்தனாக வேஷம் போடுபவன்) என்று தன்னைக் கூறிக்கொண்டார்.

**சாந்தம்**

தந்தை, தாய், சகோதரன், மனைவி இவர்களை வருடா வருடம் தொடர்ச்சியாக இழந்த போதிலும் மன அமைதி இழக்காமல் எனக்குத் தாய், தந்தை, பந்து எல்லாம் நீயே" என்று ராமனைப்பாடி சாந்தி அடைந்தார். "சீதம்மா, மாயம்மா ஸ்ரீராமுடு மாதன்றி" எனறு பாடினார்.

**சமதர்சனம் (Ego) )**

தற்பெருமையில்லாதவர். பிறர் பாடுவதைக்கேட்டு ஆனந்திப்பவர். அவர்களை மனதாறப் பாராட்டுபவர். திருபுவனம் ஸ்வாமிநாதய்யர். "ஆனந்த பைரவி" ராகத்தைப் பாடிய போது அவரைப் பெரிதும் பாராட்டி, புகழ்ந்தார். கோபால கிருஷ்ண பாரதி ஸ்வாமிகளைப் பார்க்க வந்தபோது. அவரை வணங்கி அவரை "ஆபோகி" ராகத்தில் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார். ஒரு நாயனக்காரர் வாசிப்பைக் கேட்டு மெய் மறந்து அவரைப் பாராட்டினார். எல்லா வித்வான்களையும் சமத்வமாக பாராட்டினார்.

பரமாச்சார்யார் ஸ்வாமிகள் வாழ்க்கையிலும் இந்த ஐந்து குணங்களும் பளிச்சிட்டுப் பிரகாசித்தன. அவரேதான் இவரோ?

**நிரபேக்ஷம்**

ஸ்வாமிகள் பெரும்பாலும் வாழ்ந்தது, மண்குடிசை போன்ற எளிய இடங்கள்தான். சந்நியாசிக்கு உரிய கமண்டலம், தண்டம், காவி உடை தான் அவர்கள் வைத்துக் கொண்டது. பல்லக்கு இருந்தாலும் முக்கால் வாசி ஏன், வயதான காலத்திலும் நடந்து தான் சென்றார். ஆதி சங்கரர் போல்



கால் நடையாகத்தான் இந்தியா முழுதும் பயணம் செய்து மக்களுக்கு உபதேசம் செய்தார். ஆகாரம் வெறும் பொரி அல்லது கஞ்சிதான். இந்திரிய நிக்ரகம் செய்தவர். பாதிநாள் அதுவுமில்லை. உபவாசம்தான். ராமரை சரணடைந்தது போல் தருமம், தவம், இவரிடம் குடிகொண்டது. நடமாடும் தெய்வம் என்று கொண்டாடப்பட்டார்.

**நிர்வைரம்**

ஒரு சமயம் தேதியூர் சாஸ்திரிகள் மடத்திற்கு வந்தபோது ஸ்வாமிகள் இரண்டு மாதம் காஷ்ட மௌனம் அனுசரித்து வந்தார். சாஸ்திரிகள் பிடிவாதம் செய்து ஸ்வாமிகள் மௌனத்தை கை விட்டு பேசும்படி செய்து விட்டார். இருந்தாலும் ஸ்வாமிகள் தானாகவே அவர் கேட்காமலேயே சாஸ்திரிகள் பையன் உபநயனத்திற்கு ஏற்பாடு செய்து மடத்திலிருந்து பண உதவி செய்யப் பணித்தார்.

**முனிம்**

ஒரு சமயம் மடத்திலிருந்து ஒரு வெள்ளி பாத்திரத்தை அங்கு பணி செய்த உபாத்யாயர் தெரியாமல் எடுத்துக் கொண்டதை ஸ்வாமிகளிடம் தெரியப்படுத்தினார்கள். ஸ்வாமிகள் அவரை நோக்கி "நீங்கள் தாராளமாக பயப்படாமல் எதையும் எடுத்துச் செல்லலாம், உங்களுக்கு உரிமையுண்டு" என்று சொல்லி அவரை நெகிழச் செய்தார்.

**சாந்தம்**

ஒருவர் ஸ்வாமிகளிடம் ஈடுபாடு கொள்ளாதவர். ஸ்வாமிகளைப் பற்றி குறைகள் சொல்லிக் கொண்டு வந்தார். ஒரு பக்தர் ஸ்வாமிகளிடம் இதைப் பற்றிக் கூறி வருத்தம் தெரிவிக்க, ஸ்வாமிகள் 'அவர் சொல்வது அவர் அபிப்ராயம். அவர் அதில் சந்தோஷம் அடைகிறார். நீங்கள் என்னைப்

பற்றி புகழ்ந்து மகிழ்ச்சி அடைகிறீர்கள். ஆக இருவரும் சந்தோஷமாக இருக்க எனக்கு ஆட்சேபணை யில்லை. வீண் வாதம் எதற்கு? எனக்கும் இரண்டும் சரி," என்றார்.

### சமதர்சனம்

ஒரு ஏழைப் பிராமணர் தன் 60வது வயது பூர்த்தி சமயத்தில் ஒன்றும் செய்ய வசதியில்லாமல் ஸ்வாமிகளை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றால் போதும் என்று மடத்திற்கு வந்தார், அதே சமயம் ஒரு பெரும் பணக்காரர் சஷ்டியப்த பூர்த்தி செய்து கொண்டு நிறைய திரவியம், பழம் முதலியன காணிக்கையாகக் கொண்டு வந்தார். ஸ்வாமிகள் இந்த இருவரையும் சமமாக ஆசீர்வதித்து. மடத்திலிருந்து ஒரே மாதிரியான சால்வைகள் இரண்டை இருவருக்கும் அளித்தார். கும்பகோணம் மகாமகத்தின் போது (1921) முஸ்லீம்கள் சேவை செய்ததைப் பாராட்டி அவர்களுக்கும் மடத்தின் சார்பாக பசுபதி கோவிலில் விருந்து ஏற்பாடு செய்தார். "சமத்வம் ஆராதன அச்சுதஸ்ய" (விஷ்ணுபுராணம்).

### பூஜை

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பூஜையைப் பற்றி கூறும்போது" மனசு நில்ப சக்தி லேக போது மதுர கண்ட பூஜ ஏமி சேயுநு" என்று பாடினார். மனம் ஈடுபடாத பூஜை எதற்கு? என்று பறை சாற்றினார்.

"துளசிதளமுலசே சந்தோஷமுகா பூஜிந்து" சேதுலார சிங்காரமு சேயு" என்று மனத்தை பகவானிடத்தில் செலுத்தி



அன்புடன் செய்யும் பூஜைதான் பகவானுக்கு உகந்தது என்பதை உணர்த்தினார்.

ஸ்ரீபரமாச்சர்ய ஸ்வாமிகள் ஒரு சமயம் பாலக் காட்டில் தங்கிய போது ஒரு நம்பூதிரி தனது பூஜைப் பெட்டியைத் திறந்து சாலக்ராமங்களை வெளியில் வைத்து. சிறிது நேரம் கழித்து மறுபடி அவற்றை பெட்டிக்குள் வைத்ததை தூரத்திலிருந்து கவனித்தார். உடனே அவரைக் கூப்பிட்டு. "ஏன் பூஜை செய்யவில்லை?" என்று கேட்டார். நம்பூதிரி பெரியவாளை வணங்கி என் மனது பகவானிடத்தில் ஈடுபடவில்லை. வெறும் சம்பிரதாய பூஜை வெளி வேஷமாகும் என்று நினைத்தேன் என்றார். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டு, "நீங்கள் செய்தது சரிதான். பகவான் வெறும் சடங்கை ஏற்றுக் கொள்ளமாட்டான். உள்ளன்புடன் பக்தியோடு செய்வதுதான் அவனுக்கு பிடித்தது" என்றார்.

சமஸ்கிருத காலேஜில் 1952-ல் தங்கியபோது அங்கே எல்லாவிடத்திலும் 'Silence Please' என்ற போர்டு தொங்கியதைப் பார்த்தார். உடனே தன் சிஷ்யர்களைக் கூப்பிட்டு 'இந்த போர்டு எதற்கு? எல்லாரும் கூச்சல் போட்டால் என் மனது பூஜையில் ஈடுபடாதா? நான் அவ்வளவு பலஹீனனா?" என்று கேட்டார்.

ஒரு சமயம் கலவையில் தன் பரமகுரு ஆராதனை செய்விக்க சில சாஸ்திரிகள் வந்திருந்தனர். அவர்கள் வெறுமனே கடனுக்குத்தான் கர்மா செய்பவர்கள் என்று தெரியும். உடனே ஸ்வாமிகள் சிஷ்யர்களைக் கூப்பிட்டு. "இன்று ஆராதனை வேண்டாம், எல்லாப் பிரசாதங்களையும் பசுமாட்டிற்கு வைத்துவிடு? போதும், இவர்களைப் போகச்

சொல்லவும்" என்றார். சிரத்தையில்லாத கர்மா வீண் என்று உணர்த்தினார். கர்மாவின் பலன் பண்ணி வைப்பருக்கும். பண்ணுபவர்களுக்கும் சிரத்தை இருந்தால் தான் பலிக்கும்.

## தன்னடக்கம்

ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் பல கீர்த்தனங்களில் எனக்கு பக்தியில்லை (பக்தி பிசைஷமிய்யவே) பக்தி மார்க்கமும் தெரியவீல்லை. (தெலியலேரு ராமா, பக்தி மார்க்கமு) எனக்கு பிரஹ்லாதர், நாரதர், பராசரர் ராமதாஸர் போன்றவர் பக்தி வரவில்லை என்று பலவிதங்களில் தன்னைப்பற்றி அடக்கமாகத்தான் கூறினார். 'கலிகி உண்டேகதா கலுகுனு" என்ற கிருதியில் கூறுகிறார். மேலும் நான் பாக்வத அக்ரேச வேஷி" வெறும் வேஷதாரி என்று 'நேனெந்து வெதகுதுரா' என்ற கிருதியில் சொல்லிக் கொள்கிறார்.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதஸ்வாமி உற்சவத்தில் எட்டாம் திருநாளில் ஸ்வாமி குதிரை வாகனத்தில் பவனி வரும்போது ஸ்ரீ தியாகராஜர் அங்கு விஜயம் செய்தார். ஏராள கூட்டம். ஸ்வாமிகள் தன்னை பிரகடனப்படுத்தாமல் ஓர் மூலையில் உட்கார்ந்து ஸ்ரீரங்க நாதரின் திவ்யமங்கள கோலத்தை வர்ணித்து "ராஜீ வெடல ஜூதா முராரே" என்று தோடியில் பாடிக்கொண்டிருந்தார். ரங்கநாதர், மேலே ஊர்வலம் போகவிடாமல் கனத்துக் கொண்டேபோக சுவாமி யை கீழே இறக்கிவைக்க நேர்ந்தது. ஓர் அசரீரி "தியாகராஜனை அழைத்து வா!" என்ற கூற எல்லாரும் பல இடங்களில் தேடி கடைசியில் ஓர் மூலையில் கண்ணும் கண்ணீருமாக அமர்ந்திருந்த தியாகராஜரைப் பார்த்து அவரை மரியாதையாக அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைத்தனர். பிறகுதான் ஊர்வலம் கிளம்பியது.



"ராமா! என்னைப்போல் ஆயிரம் தியாகராஜன் உனக்குக் கிடைப்பான் ஆனால் எனக்கு உன்னை விட்டால் வேறு ராமருக்கு எங்கே போவேன்" என்று கதறினார்.

தன்னைப் பற்றி உயர்வாக அவர் என்றும் நினைத்ததில்லை. அடக்கம் அவரது உயர்ந்த பூஷணம். எல்லாம் கிர்த்தனங்களிலும். "பஜனை செய்கிறேன்" என்று தான் கூறுகிறார். சங்கீதக் கச்சேரி செய்ததாகத் தெரியவில்லை.

Bhajana is for God - Katchery is for audience and fame and money.

அக்பர் தன் ஆஸ்தான வித்வானான தான்சேனுடன் யமுனைக் கரைக்கு ஒரு நாள் போன போது. அங்கு சூர்தாஸ் உருக்கமாக பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு மயங்கினார். எவ்வளவு உயர்வான சங்கீதம்? என்றார்.

தான்சேன் உடனே "மகாராஜா அது உண்மைதான். நான் தங்களுக்காகப் பாடுகிறேன் அவர் ஆண்டவனுக்காக பாடுகிறார்" என்றார்.

நமது பரமாச்சார்ய ஸ்வாமிகள் அடக்கத்தின் மொத்த உருவம்.

1954 ல் முதல் கனகாபிஷேகம் ஏற்பாடு செய்தபோது 'எனக்கு வேண்டாம், ஆதிசங்கரருக்குச் செய்யுங்கள்" என்றார். எல்லாரும் நிர்ப்பந்தித்தார்கள். சரி, முதலில் ஆதிசங்கரருக்கு அபிஷேகம் செய்து பிறகு அவற்றைப் பிரசாதமாக எனக்குச் செய்யுங்கள். போட்டோ, விளம்பரம் வேண்டாம்" என்றார். மாலையில் பேசும்போது. "எனக்கு

இவ்வளவு மரியாதை நடப்பது, நான் ஆதிசங்கரர் பீடத்தில் அவர் வேஷத்தில் இருப்பதால் தான். எனக்கு ஒரு யோக்யதையும் இல்லை. நான் நிஜமாக ஆதி சங்கரராய் ஆகிவிட்டால் எப்படி இருக்கும்?'' என்று சொன்னார். (தியாகராஜரின் மறுபதிப்பு ஏன்று தான் சொல்ல வேண்டும்)

ஒரு சமயம் கேரளாவில் படகில் சென்று கொண்டிருந்த சமயம். எதிரில் சுமார் 100 படகுகள் வந்து கொண்டு இருந்தன. ஜனங்கள் ஆற்றின் கரைமேல் கை கட்டி நின்று கொண்டிருந்தார்கள் யாரோ பெரிய பிரபு வருகிறார் என்று எண்ணி ஸ்வாமிகள் தன் சிஷ்யனைப் போய் விசாரிக்கச் சொன்னார். விசாரித்ததில் 'ஈப்பன் என்பவர் அவர்கள் தலைவன். பெரிய பிரபு. அவர் வருவதால் அத்தனை படகுகள் கூட வருகின்றன. எல்லாரும் மரியாதைக்காக எழுந்து நிற்கிறார்கள், என்று தெரிந்தது.

ஸ்வாமிகள் உடனே தன் படகை நிறுத்தச் சொல்லி ஒரு ஓரமாக ஒதுங்கி, ஈப்பன் சென்ற பிறகு தொடரலாம் என்று தங்கிவிட்டார். 1/2 மணி ஆகியும் ஈப்பனாவது. படகுகளாவது நகரவில்லை. அப்படியே நின்று விட்டார்கள். விசாரித்ததில் ஸ்வாமிகள் வருகிறார் என்று தெரிந்து மரியாதைக்காக ஈப்பன் தன் படகில் எழுந்து கைகட்டி நின்று ஸ்வாமிகள் வருகைக்காக காத்திருக்கிறார் என்று தெரிய வந்தது. ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டு அவர்களைத் தூண்டிச் சென்ற போது அனைவரும் ஸ்வாமிகளை வணங்கி ஆசிபெற்றனர்.

(அந்த ஈப்பன் பரம்பரை தான் மகாராஷ்டிர ஆளுநர் அலக்ஸாண்டர்)

அகோபில மடம் ஜீயர் ஒரு சமயம் ஸ்வாமிகள் தங்கின ஊரில் சாதுர்மாஸ்ய விரதம் இருந்தார். ஸ்வாமிகளைப்



பார்க்க அவருக்கு மிகவும் ஆசை. ஆனால் சம்பிரதாயம் இடம் கொடுக்கவில்லை. மனம் வருந்தினார். ஸ்வாமிகள் ஞான திருஷ்டியால் இதைத் தெரிந்து கொண்டு மறுநாள், தன் சிஷ்யர்களைக் கூப்பிட்டு ஜீயர் தங்கியிருக்கும் மடம் வழியாக ஸ்நானத்திற்கு செல்[illegible]ற்பாடு செய்தார். ஜீயர் ஸ்வாமிகள் இதை அறிந்து [illegible]ஷத்துடன் வெளியே கிளம்பி போக இருவரும் சந்தித்தனர்.

ஸ்வாமிகள் Ego என்றால் என்ன என்று அறியாதவர். எளிமையின் அவதாரம், எனக்கு என்ன தெரியும்? நான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது" என்று கூறுவார். வினயத்தில் ஆஞ்சநேயர். "வித்யானாம் வினய சம்பன்னா"

## பிறர் குற்றத்தைத்தான் ஏற்பது

ஸ்ரீதியாகராஜர் திருப்பதி யாத்திரை சென்ற போது திருடர்கள் வழியில் அவரிடம் இருந்த 1000 வராகன்களை அபகரிக்க வந்தார்கள். கோவூர் சுந்தரேச முதலியார் என்ற பக்தர், ஸ்வாமிகளுக்குத் தெரியாமல் அந்த பணத்தை பல்லக்கில் வைத்து விட்டார். உண்மையில் ஸ்வாமிகளுக்கு அது தெரியாது. ராம லஷ்மணர்கள் தோன்றி திருடர்களை தண்டித்து மயங்கச் செய்த போது அவர்கள் ஸ்வாமிகள் காலில் வீழ்ந்து மன்னிப்பு கோரினர். ஸ்வாமிகள் "நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். ராம தரிசனம் கிடைத்தது. நான் பணம் வைத்திருந்தது என் குற்றம். பகவான் எனக்குக் காட்சி கொடுக்காமல் என்னை தண்டித்து விட்டார்" என்று கதறினார்.

பரமாச்சார்ய ஸ்வாமிகளிடம் ஒரு பக்தர் "உங்களிடம் வரும் போது உங்கள் முன்னால் எல்லாரும் பயபக்தியுடன் ஆசாரமாக இருக்கிறார்கள். வெளியில் போனவுடன் சுயவேஷம் வந்து விடுகிறது என்றார். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டு" என் தபசு, போதவில்லை. வெளியிலும் அவர்கள் நல்லபடியாக இருக்கச் செய்ய முடியவில்லை" என்று தன்னையே குற்றவாளியாக்கிக் கொண்டார்.

மடத்தில் ஏதாவது தவறு நடந்தால் தான் உபவாசம் மேற்கொள்வார். குற்றம் தன்னையே சேரும் என்று சொல்லி பிராயச்சித்தம் செய்து கொள்வார்.

பரமேஸ்வரன் பாற்கடலில் வந்த விஷத்தைத் தான் உண்டு, பிறருக்கு அமிர்தத்தை அளிக்க வில்லையா?

## ஏழைப்பங்காளன்

தியாகராஜஸ்மிகள் ஏழை, எளியவர்களை மதித்தார், அவர்கள் சந்தோஷமே தன் இன்பமாக கருதினார்.

திருபுவனம் ஸ்வாமி நாதய்யர் பொம்மலாட்டக்காரர். அதுதான் அவர் பிழைப்பு. அவர் நன்றாகப் பாடுவார். ஆனந்த பைரவி அவருக்கு எடுப்பாக வரும். எல்லாரும் முக்கியமாக அதைக் கேட்கவே வருவார்கள். அவர் வேண்டிக் கொண்டதின் பேரில் ஸ்வாமிகள் அவரிடம் "நான் இனி ஆனந்த பைரவி பாடாமல் இருந்து விடுகிறேன். உங்கள் புகழ் என்றும் நிலைக்கட்டும்" என்று கருணையோடு சொன்னார்.

நடேச ஆச்சாரி என்பவர் ஏழை. தெருக் கூத்து நடத்துபவர். ஸ்வாமிகளிடம் வந்து "எங்கள் ராமாயண நாடகத்திற்கு நீங்கள் வந்து கௌரவித்தால் எனக்குப்



பெருமையுண்டாகும். மேலும் கூட்டம் வரும். வசூலும் நடக்கும்" என்று வேண்டினார்.

ஸ்வாமிகள் அவர் விருப்பப்படி இரவு முழுவதும் விடிய விடிய கண்விழித்து அந்த நாடகத்தைப் பார்த்து, காலையில் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து, ஆச்சாரியை கௌரவப்படுத்தினார்.

திருப்பதி யாத்திரையின் போது புத்தூரில் ஒரு ஏழை யாத்திரிகன் தவறி கிணற்றில் வீழ்ந்து இறந்து போக, அவன் மனைவி கதறியதைப் பார்த்து சகிக்காமல் ராமனை வேண்டி "ஜீவாதார" என்ற கீர்த்தனை பாட இறந்தவன் உயிர் பெற்று எழுந்தான். ஸ்வாமிகள் அமானுஷ்ய சக்தியை வெளிப்படுத்துவதில்லை. அதில் ஈடுபாடு கிடையாது. இருந்தாலும் இந்த ஸ்தீரி மீது உள்ள கருணையால் இதை நிகழ்த்தினார்.

பரமாச்சார்ய ஸ்வாமிகள் எப்போதும் தன்னிடம் வருபவர்களில் எழ்மையானவர்களைத்தான் கூர்மையாக கவனிப்பார்.

கோடிக்கரையில் ஸ்நானம் செய்யச் சென்ற போது வழிநெடுகிலும் கூட்டம். ஒரு ஏழை குடியானவன். வழியில் திடீரென்று வீழ்ந்து நமஸ்கரித்தான். அங்கிருந்த ஒரு மி ராசுதார், ஒரு கம்பினால் அவனை அடித்துவிட்டார். உடனே ஸ்வாமிகள் ஒருவருடனும் பேசாமல் அந்த ஏழையைத் தூக்கச் சொல்லி தன் சிஷ்யர்களிடம் அவனுக்கு உடனே வைத்யம் செய்யச் சொன்னார், என்னே கருணையின் வடிவம்!

டாக்டர் பொன்னம்மாள் கம்யூனிஸ்டு தலைவர், ராமமூர்த்தியின் பெண். பெரியவாளிடம் ஆசிகள் பெறச் சென்றார். பெரியவாள். "ஏழைகளுக்கு இலவசமாக வைத்யம் செய். அவர்களை அன்போடு நடத்து. ஆண்டவன் உன்னை ரக்ஷிப்பான்" என்றார். ஏழைகள் ஆண்டவன் குழந்தைகள் என்று உணர்த்தினார்.

ஒரு பெரிய தனவந்தர் ஸ்வாமிகளிடம் "எனக்கு பகவான் அருளால் எல்லா பாக்கியமும் உண்டு" என்றார். "பிறர்க்கு உதவும் பாக்கியம் இருக்கிறதா" என்று ஸ்வாமிகள் கேட்க, அவர் தலை குனிந்தார்.

ஒரு ஏழை பிராமணர் தன் பெண்ணை அழைத்துச் சென்று ஸ்வாமிகளிடம் 'என் பெண் கல்யாணத்திற்கு என்னிடத்தில் எதுவும் இல்லை. என்ன செய்வது என்று தெரியவில்லை" என்றார். அப்போது அங்கு வந்த மார்வாடியிடம் "நீங்கள் கொண்டு வந்திருக்கும் 13 பவுன்களை இந்த ஏழைக்குக் கொடுங்கள். காமாக்ஷிக்குப் போய்ச் சேரும்" என்றார்.

"ஏழையின் சிரிப்பிலே இறைவனைப் பார்க்கலாம். அவன் அனாத பந்து.

## த்வைதம் / அத்வைதம்

ஸ்ரீ தியாகராஜர், த்வைதம், அத்வைதம் என்ற பேதமீ அர்த்த மற்றது என்று பாடினார். "த்வைதமு சுகமா? அத்வைதமு சுகமா?" என்ற கீர்த்தனையில் "ராமா, நீ இரண்டுக்கும் அப்பாற்பட்டவன் என்று தான் உன்னை பாகவதர்கள் ஆஸ்ரயிக்கிறார்கள்" என்கிறார்.

"எவரினி" என்ற கீர்த்தனையில் நீ சிவனா, விஷ்ணுவா, பிரம்மாவா அல்லது அருவமான பரப்ரம்மமா?" என்று



வினவுகிறார்.

"நீ நாம, ரூபம் உலகு நித்ய ஜய மங்களம்" என்ற பாட்டில் அருவமான உன் நாமமும், உருவமுள்ள உன் திவ்ய ஸ்வரூபமும், மங்களம் உண்டாக்கட்டும் என்கிறார்.

(தோத்தாத்ரி என்ற அத்வைதி, ராமகிருஷ்ணர் செய்த உருவ வழிபாட்டை குறைவாக பேசினார். அவருக்கு ஒரு நாள் வயிற்றுவலி வந்து தாங்காமல் கங்கையில் வீழ்ந்து உயிர் விட முயன்றார். ராமகிருஷ்ணர், காளியை வேண்டி கங்கை ஜலம் இடுப்பளவுக்கு மேல் போகாமல் செய்தார். தோத்தாத்ரி ஆச்சரியப்பட்டு, ராமகிருஷ்ணரை வணங்கி மன்னிப்பு கேட்டார். பகவான் சொன்னார். 'ப்ரம்மம் செயல்படும்போது உருவம் எடுக்கிறது. அவ்வளவுதான். இரண்டும் ஒன்றுதான்" என்று விளக்கினார். 'தண்ணீர் ஐஸ் கட்டியாக மாறினாலும் இரண்டும் ஒன்றுதான். நிர்க்குணப் பிரம்மம் தான் சகுணமாக காட்சியளிக்கிறது' என்றார்?

மகாப் பெரியவாள் திருப்பதிக்கு (1954) விஜயம் செய்த போது அத்வைதத்தைப் பற்றி விளக்கினார். "நான் அத்வைத மடத்தைச் சேர்ந்தவன் என்றாலும் சகுணமான சந்திர மௌளீஸ்வரைத்தான் பூஜிக்கிறேன். இங்கே எழுந்தருளியிருக்கும் வெங்கடேசப் பெருமாள், சர்வம் ஆனவர். எனக்கு அம்பாளாகத் தோன்றுகிறார். புடவைச் உடுத்துதல் வெள்ளிக்கிழமை திருமஞ்சனம், நவராத்திரி உத்சவம், யாளிகள் பிம்பம் இவையெல்லாம் என் எண்ணத்தை பிரதிபலிக்கின்றன" என்றார். சதாசிவ ப்ரம்மேந்திராள் அத்வைதி; திகம்பரர்; "மானஸசஞ்சரரே பிரும்மணி" என்ற கீர்த்தனையில் ப்ரம்மம். "மதசிகி பிஞ்ச

அலங்க்ருதசிகுரே" ப்ரம்மம். கண்ணனாக காட்சி அளிக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார். அத்வைத பாஸ்கரனாகிய ஆதிசங்கரர், "பஜகோவிந்தம்" என்று பாடினார். ஞானியான பெரியவாள் அத்வைதம், த்வைதம் இரண்டையும் கடந்தவர். ஒரு சமயம் ஒரு கிராமத்தில் வயல் வழியே சென்ற போது, அங்கிருந்த ஏழைகளுக்கு பழம், தேங்காய் எல்லாம் கொடுத்துவிட்டு "இன்று பூஜை ஆகி விட்டது" என்றார். "சர்வம் ப்ரும்ம மயம்" என்ற வாக்கியத்திற்கு எடுத்துக் காட்டு. கடைசி காலத்தில் பூஜைகளை கைவிட்டு பிரம்மத்துடன் ஐக்கியம்மாய் விட்டார். உருவம் அருவம் இரண்டும் ஒன்றே என்று நடத்திக் காண்பித்தார்.

## உள்ளத்தூய்மை தான் முக்கியம்

ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் வட நாட்டுக்குப் போகவில்லை. காசிக்குப் போய் கங்கை ஸ்னானம் முதலிய செய்வது முக்கியமில்லை என்று உணர்த்தினார். உள்ளத் தூய்மைதான் உயர்ந்தது.

(ராமத்) தியானமே வரமைன
கங்காஸ்னானமே ! மனசா
வாந நீட முனுகி முனுகி லோனி
வஞ்சனத் ரோகமனுகர போவுநா"

என்று தன்யாசியில் பாடினார்.

"ராமத்யானமே கங்காஸ்னானத்திற்குச் சமம், மழை நீரில் எவ்வளவு முழ்கி நனைந்தாலும் மனதில் உள்ள காமக்ரோதங்கள் போகுமா" என்பது

(கோராகும்பர் தீர்த்த யாத்திரை சென்ற பாகவதர்களிடம் ஒரு பாகற்காய் கொடுத்து அதை எல்லா தீர்த்தங்களிலும்



முழ்க வைத்துக் கொண்டு வரச் சொன்னார். பிறகு அதை வெட்டிப்பார்த்து. "கசப்பு அப்படியேதான் இருக்கிறது. எவ்வளவு தீர்த்தங்களில் நீராடினாலும் மனிதன் அப்படியேதான் இருக்கின்றான் என்றார்.)

மகாப் பெரியவாள் திருச்சியில் முகாம் செய்தபோது. பல காங்கிரஸ் தலைவர்கள் அவரைத்தரிசிக்க வந்தனர். ராஜாஜி வரவில்லை. ஸ்வாமிகள் வெளியே தங்கிவிட் ராஜாஜியை உள்ள அழைத்து வரச் சொன்னார். "ஏன் வரவில்லை? என்று கேட்க. ராஜாஜி நான் ஸ்னானம் செய்து விட்டுத் தங்களை தரிசிக்கலாம் என்று நினைத்தேன்" என்றார். பெரியவாள் சிரித்து "உங்களுக்கு புற சுத்தம் தேவையில்லை. உள் சுத்தம் இருக்கிறது அது போதும்" என்றார்.

அதே அதே மாதிரி மதுரை மணிஅய்யர் வீட்டுக்குச் சென்ற போது வாசலில் நின்று அவரைக் கூப்பிட்டு ஏன் வரவில்லை? என்று கேட்க. மணி அய்யர் "நான் ஸ்னானம் செய்ய வில்லை. ஆசாரமில்லை என்றார். ஸ்வாமிகள் சிரித்து 'உனக்கு, சங்கீத ஆசாரம் இருக்கிறதே. அது போதுமே" என்றார் உடல் ஆசாரத்தில் மட்டும் பெருமையில்லை.

## ராம நாம மகிமை

ஸ்ரீ தியாக ராஜர் ராம நாமத்தை 96 கோடி ஜபித்தார். ராம நாமம் இல்லாமல் தன்னால் வாழமுடியாது என்றார். 'நன்னு விடசி' என்ற கீர்த்தனையில், ராமா உன்னை விட்டு அரை நிமிஷமும் வாழமுடியாது. 'நின்னுபாசி அர நிமி ஷவோர்வனுரா" என்று பாடுகிறார். ராம நாமத்தைக் கண்டு

எமன் நடுங்குகிறான் என்று ஒரு கீர்த்தனையில் (சிந்திஸ்துன்னாடே யமுடு) கூறுகிறார். ராம நாமம் இருக்கும் இடத்தில் யமன் பிரவேசிக்க மாட்டான் என்று பறை சாற்றினார்.

மகாப்பெரியவாள் தன் முத்ராதிகாரிகளுக்கு 1966-ல் ஒரு ஆணையிட்டார். "எந்த வீட்டில் யார் இறக்கும் தருவாயிலிருந்தாலும் கூப்பிடாமலேயே சென்று. அங்கு ராமநாமம் 1008 தடவை சொல்லிவிட்டு வரவேண்டும். அந்த ஆத்மா முக்தி அடைந்து விடும்! என்றார். இது ஜீவாத்ம கைங்கர்யம் என்றார். அவர் ஜனங்கள் இருக்கும் போது எல்லா அனுக்ரஹங்களையும் செய்தது மட்டுமில்லாமல் உயிர் போனபிறகும் நல்ல கதி அடையவேண்டும் என்று கருணையைச் சொரிந்தார்.

"அகமதில் இருளற, இகமதில் இடர்அற பரமதில் பதம் பெற வருமருள் குருபர. சந்திர சேகர கிருபாநிதே" என்ற கீர்த்தனையில் அவரைப் புகழ்ந்து பாடுகிறோம்.

## அரனை மறவேல்
## Ever Remember God

ஶ்ரீதியாகராஜஸ்வாமிகள் தன் முகாரி கீர்த்தனமாகிய க்ஷீணமையில், ஏதிஜேஸி ஜகந்தாதுடு சிரமுன ஹிருதய முனவஹிஞ்சி" என்று கூறுகிறார். எந்த செயல் பாட்டிலும். கடவுள் தொடர்புவேண்டும் தவறு நேராது என்பது பொருள். (Thought Word Deed)



பரமாச்சார்யாள் ஒரு தடவை அமெரிக்கப்பாதிரி (Howard) உபதேசம் கேட்டபோது `God is Watching you in all your thought word and deed. Hence keep him always as a companion you will not go wrong' என்றார். கடவுள் துணை இருந்தால் எந்த காரியமும் கெடாது, மங்களம் உண்டாகும், என்றார்.

## முடிவுரை

மகான்களை சாமான்யர்கள் எடை போட முடியாது. இருப்பினும் கங்கையில் மூழ்கி அவர்களால் முடிந்த அளவு கங்கா ஜலம் எடுத்து வருவது போல், சிறியவனான நான் இரு மகா மேருபர்வதங்களைப் பற்றி (பக்தி, ஞானம்) என் சிற்றறிவுக்கு எட்டியபடி அனுபவித்ததை எழுதி மகிழ்ந்தேன். அப்பயதீக்ஷிதர் பரமேஸ்வரனைத் ஒவ்வொரு நாளும் கடைசியில் "வாக்கிற்கு அப்பாற்பட்ட உன் குணங்களை என் சிறிய அறிவு கொண்டு ஸ்தோத்ரம் செய்து மகிழ்கிறேன். மன்னித் தருள வேண்டும்'. என்று பிரார்த்திப்பது வழக்கம். அதுபோல் இந்த இரு ஒப்பற்ற மகான்களும் என்னை மன்னிக்க வேண்டி வணங்குகிறேன்.

சுபம்

## மகாப் பெரியவாளின் தன்னிகரில்லா தன்னடக்கம்

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்வாமிகள் திருவையாற்றில் முகாம் செய்திருந்தார். புஷ்ய மண்டப தெருவில் ஒரு வீட்டில் ஸ்வாமிகள் தங்கி பூஜை செய்ய ஏற்பாடாயிருந்தது.

ஒரு நாள் தெற்கு வீதியில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை ஒரு புஷ்பப் பல்லக்கில் வைத்து கருஞ்சட்டை வீரர்கள் பெரிய கூட்டமாக ஊர்வலம் நடத்திச் சென்றனர். ஒரே அமர்க்களம், நாஸ்திகவாத கோஷம், ஊரே அதிர்ந்தது.

ஸ்வாமிகள் அந்த சமயம் புஷ்ய மண்டபத் தெருவில் வந்து கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்தைப் பார்த்து விட்டு அமைதியாய் ஓர் வீட்டின் ஓரமாகத் தங்கிவிட்டார். பெரியார் ஈ.வே.ரா. இதைக் கவனித்துவிட்டார். ஸ்வாமிகள் தன்னைப் பார்த்து ஒதுங்குவதைக் கவனித்தார். உடனே பல்லக்கை விட்டு இறங்கிச் சென்று காலணிகளை கழற்றி விட்டு ஸ்வாமி களை வணங்கிணார். ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் கை தூக்கி ஆசி வழங்கினார். பெரியாரும் "விடைபெறுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிறகு தன் ஊர்வலத்தைத் தொடங்கினார்.

இந்தச் சம்பவம் எல்லாரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. அன்பின் வடிவமான ஸ்வாமிகளுக்கு விரோதி யார்?

"தகவல்"

நேரில் ஸ்வாமிகளோடு கூட இருந்து பார்த்தவர் கூறியது

குறிப்பு : பெரியாரின் உயர்ந்த பண்பு மதமானாலும் சரி, அரசியலானாலும் சரி, கொள்கை மாறுபாடு காரணமாக தனிப்பட்ட முறையில் யாரிடமும் வெறுப்பு காட்டமாட்டார். உரிய மரியாதையை செலுத்துவார். ராஜாஜியிடம் அவருக்குள்ள மரியாதை உலகப்பிரசித்தம். ஒழுக்கம் விழுப்பம், தருதலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற குறளின்படி ஒழுக்கம் எங்கிருந்தாலும் அதனை மதிப்பது அவர் தனிப் பண்பு.



புத்திர் பலம் யசோ தைர்யம்
நிர்ப்பயத்வம் அரோகதா
அஜாட்யம் வாக் படுத்வம்ச
ஹனுமத் ஸமரணாத் பவேத்

ஐந்தாம் பதிப்பு மே 2002

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

1. ஆஞ்சநேய வைபவம் 6 பதிப்புகள்
2. ஞானப்பழம் பாகம் 1
3. ஞானப்பழம் பாகம் 2
4. ராம நாம தாரகம்
5. திருமலை தெய்வம்

## கிடைக்குமிடம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராச்சார்யா ஸ்வாமிகள் ஸ்ரீமடம்,
1, சாலை தெரு
காஞ்சிபுரம்.

விலை ரூ. 5/-

THE PRINT VISIONS, © 4846916 / 4730637